# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
**தொலைபேசி எண்: 044–22201337**
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.372/ந/2025, நாள் 30.06.2026

S.அன்பழகன்,
துறையூர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

1. நகராட்சி ஆணையர்,
துறையூர் நகராட்சி,
துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

2. கட்டிட உரிமையாளர், – எதிர்மனுதாரர்கள்
ஸ்ரீ ஜெயலட்சுமி மெட்டல் மார்ட்,
துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர், முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண்.155 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.அன்பழகன் என்பவரது 03.11.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 04.11.2025 அன்று பெறப்பட்டு, 372/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர், முசிறி மெயின் ரோடு, அசோக் நகர், கதவு எண்.155 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.அன்பழகன் என்பவரது 04.11.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"திருச்சி மாவட்டம், துறையூர் திருச்சி சாலையில் சுப்ரீம் மொபைல்ஸ் கடைக்கு தெற்கு புறம் 145ல் ஸ்ரீ ஜெயலட்சுமி மெட்டல் மார்ட் கடை 3 மாடிகளுடன் அரசு கழிவு நீர் கால்வாயில் வாசல்படி வைத்து பார்க்கிங், செட்பேக் வசதியின்றி செயல்படுகின்றது. திருமுருகன் ஸ்டோர்ஸ்க்கு வடக்கு புறம் ஸ்ரீ ஜெயலட்சுமி மெட்டல் மார்ட் என்ற கடை 4 மாடிகளுடன் அரசு கழிவுநீர் கால்வாயில் வாசல்படி வைத்து பார்க்கிங், செட்பேக் வசதியின்றி இயங்கி வருகின்றது. எனவே விதி மீறிய ஒரே நபருக்கு சொந்தமான 2 கட்டிடங்களையும் இடித்து அகற்றுமாறு 15.09.2025ல் பொது நலன் கருதி நான் துறையூர் நகராட்சி ஆணையருக்கு புகார் அனுப்பி அதனை அவர் 16.09.2025ல் பெற்று கொண்டதாக எனக்கு ஒப்புகை சான்று வந்துள்ளது. ஆணையருக்கு அனுப்பிய புகாரின் நகலை நகராட்சி இயக்குனர், மண்டல இயக்குனருக்கும் அனுப்பினேன்.

நான் ஆணையருக்கு அளித்துள்ள புகாரிலேயே TNCDBR 2019ன்படி கட்டிட வரைபடத்தில் Parking and set back Area குறிப்பிடப்பட்டுதான் அனுமதி நகராட்சியால் வழங்க முடியும் என்று சட்டம் இருப்பதோடு கட்டிடத்தின் முன்புறம் 5 மீட்டர் set back கட்டாயம் இருக்க வேண்டும் என்ற சூழ்நிலையில் அதுவும் பிரதான சாலையில் அடுத்தடுத்து ஸ்ரீ ஜெயலட்சுமி மெட்டல் மார்ட் 2 கட்டிடம், 4 மாடி, 3 மாடிகளுடன் அரசு கழிவு நீர் கால்வாயில் வாசல்படி வைத்து பார்க்கிங், செட்பேக் வசதியின்றி விதிமீறி கட்டப்பட்டுள்ளது எனக்கு அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்துவதாக கூறியிருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே நகராட்சி இயக்குனரின் அறிவுறுத்தல்களை கடந்த 10 வருடங்களுக்கு மேலாக துறையூர் நகராட்சி ஆணையர்கள் பின்பற்றாததை தெரிவித்தும், உரிய கால இடைவெளியில் இந்த கட்டிடத்தை ஆய்வு செய்திருந்தால் விதிமீறல்களை தடுத்திருக்கலாம் என்று கூறியதோடு கடந்த 10 வருடங்களுக்கு மேலாக பணியில் இருந்த அனைத்து ஆணையர்களும் இந்த கட்டிடத்தை இதுவரை ஆய்வு செய்யாமல் இருப்பதிலிருந்து அனைத்து ஆணையர்களும் சிறிதும் வெட்கமின்றி லஞ்சம் பெற்றுள்ளார்கள் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணமாகின்றது என்று கூறியிருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே மாண்புமிகு உயர்நீதிமன்றம் விதிமீறல் தொடர்பான அனைத்து வழக்குகளிலும் பல்வேறு உத்தரவு போட்டிருப்பது தெரிந்தும் கடந்த 10 வருடங்கள் மேலான பார்க்கும் இடமெல்லாம் விதிமீறல் கட்டிடங்கள் துறையூர் நகர் முழுவதும் புற்றீச்சல் போல் இருப்பதிலிருந்து அனைத்து ஆணையர்களும் தங்களை உயர்நீதிமன்றத்தைவிட சர்வ வல்லமை படைத்தவர்களாக காட்டி கொள்ள வேண்டும் என்று கருதி செயல்பட்டுள்ளார்களோ என்று நினைக்க தோன்றுவதாக குறிப்பிட்டிருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே அனுமதியின்றி செயல்படும் கட்டிடங்கள் மீது தேவையான நடவடிக்கைகளுக்காக மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவை இணைத்து (உச்ச நீதிமன்ற உத்தரவு எண்.12199/12200 நாள் 30.04.2025) ROC எண். 3555/2025/TP3 நாள் 15.05.2025 கடிதம் மூலம் நகராட்சி இயக்குநர் அனைத்து நகராட்சி ஆணையர்களுக்கும் கடிதம் அனுப்பியதை நினைவூட்டியிருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே சமீபத்தில் மாண்புமிகு உயர்நீதிமன்றம் கடமையை செய்ய தவறிய IAS ஆபிசருக்கு விதித்த தண்டனையை பற்றி குறிப்பிட்டதோடு, தமிழக மக்களுக்கு நீதி பெற்று தருவதில் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் அனைத்து நீதிபதிகளும் எந்த எல்லைக்கும் செல்வார்கள் என்பதை மனதில் வைத்து மாண்புமிகு உச்சநீதிமன்ற உயர்நீதிமன்ற உத்தரவை பின்பற்றி விதிகளை மீறி கட்டி உள்ள ஸ்ரீ ஜெயலட்சுமி மெட்டல் மார்ட் பெயரிட்டுள்ள 2 கட்டிடங்களையும் இடித்து அகற்றுமாறு தெரிவித்திருந்தேன்.

நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே ஆணையர் மக்கள் வரிப்பணத்தில் சம்பளம் பெறுவதை மனதில் வைத்து நேர்மையோடு ஸ்ரீ ஜெயலட்சுமி மெட்டல் மார்ட் என்று பெயரிட்டுள்ள 2 கட்டிடத்தையும் நேரடியாக கள ஆய்வு, அந்த 2 கட்டிடங்களும் TNCDBR 2019ன்படி Set back எவ்வளவு விடப்பட்டுள்ளது என்பதையும் கட்டிட வரைபடத்தில் பார்க்கிங் குறிப்பிடப்பட்டு அனுமதி பெறப்பட்டதா என்பதையும், 4 மாடி, 3 மாடி கட்ட அனுமதி அளிக்கப்பட்டதா என்பதையும் கட்டிட வரைபடத்தில் உள்ளபடி 2 கட்டிடங்களும் கட்டப்பட்டு கட்டிட நிறைவு சான்று நகராட்சியால் வழங்கப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்து கட்டிடம் விதி மீறி கட்டப்பட்டுள்ளது கண்டறியப்பட்டால் மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவின் கீழ் அந்த விதிமீறிய 2 கட்டிடத்தை இடித்து அகற்றுமாறும், தெரிவித்து தலைமை செயலாளரின் சுற்றறிக்கைபடி 30 நாட்களுக்குள் எனக்கு பதில் அளிக்காவிட்டால் மனுநீதிசோழன் போல் நீதி வழங்கும் உயர்நீதிமன்றத்திலும், உயர்நீதி மன்றம் போல் சிறப்பான நீதி வழங்கும் உள்ளாட்சி முறை மன்ற நடுவரிடமும் வழக்கு தாக்கல் செய்வதாக கூறியிருந்தேன்.

எனவே நான் ஆணையருக்கு அளித்த புகாரிலேயே மாண்புமிகு உச்சநீதிமன்ற உயர்நீதிமன்ற உத்தரவுகளை சுட்டி காட்டியதோடு தலைமை செயலாளரின் சுற்றறிக்கைபடி 30 நாட்களுக்குள் எனக்கு பதில் அளிக்காவிட்டால் மனுநீதிச்சோழன் போல் நீதி வழங்கும்

உயர்நீதிமன்றத்திலும், உள்ளாட்சி முறை மன்ற நடுவரிடமும் வழக்கு தாக்கல் செய்வேன் என்று கூறியும் இதுவரை விதிமீறிய ஸ்ரீ ஜெயலட்சுமி மெட்டல் மார்ட் கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதிலிருந்து விதிமீறிய கட்டிடத்திற்கு ஆணையர் ஆதரவாக உள்ளார் என்பது நன்கு விளங்குகின்றது.

எனவே குற்றவாளியும், நீதிபதியும் எப்படி ஒருவராக இருக்க முடியாதோ அதே போல் ஆணையர் குற்றத்தை அவரே விசாரிப்பது இயற்கை நீதிக்கு புறம்பானது என்று கருதுவதாலும் ஆணையர் கொடுக்கும் வாக்குமூலம், அறிக்கை அனைத்தும் விதிமீறிய ஸ்ரீ ஜெயலட்சுமி மெட்டல் மார்ட் நிர்வாகிக்கு சாதகமாக அளித்து அவரை எப்படியும் காப்பாற்றிவிடுவார்.

எனவே மாண்புமிகு உயர்நீதிமன்றம் போன்று நடுவு நிலை தவறாமல் நேர்மையான நீதி வழங்கும் தாங்கள் ஸ்ரீ ஜெயலட்சுமி மெட்டல் மார்ட், 2 கட்டிடத்தையும் இடநேராய்வு செய்து கட்டிடம் விதிப்படி கட்டப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்து அந்த 2 கட்டிடங்களும் கட்டிட வரைபடத்தில் உள்ளபடி கட்டிடம் கட்டப்பட்டு, அந்த 2 கட்டிடங்களுக்கும் நகராட்சி கட்டிட நிறைவு சான்று வழங்கி உள்ளதா என்பதை கண்டறிந்து விதிமீறி ஸ்ரீ ஜெயலட்சுமி மெட்டல் மார்ட் என்று பெயரிடப்பட்டுள்ள 2 கட்டிடங்களும் கட்டப்பட்டுள்ளது ஆய்வில் தெரிய வந்தால் அந்த கட்டிடங்களை மாண்புமிகு உச்ச நீதிமன்ற உத்தரவின் கீழ் இடித்து அகற்றுமாறு தங்களை தாழ்மையுடன் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரது மனு குறித்து துறையூர் நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 13.11.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது. ஆனால் அறிக்கை பெறப்படவில்லை.

3. எனினும் மனுதாரர், எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையர் மற்றும் 2–ம் எதிர்மனுதாரரான ஸ்ரீ ஜெயலட்சுமி மெட்டல் மார்ட் கட்டிட உரிமையாளர் ஆகியோரை 12.05.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 08.04.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. அதனைத்தொடர்ந்து நிர்வாக காரணங்களினால் மேற்படி விசாரணை 19.05.2026 அன்று நடைபெறும் எனத்தெரிவித்து 21.04.2026 நாளிட்ட அழைப்பாணைகள் மனுதாரருக்கும், துறையூர் நகராட்சி ஆணையருக்கும், 2ம் எதிர்மனுதாரரான ஸ்ரீ ஜெயலட்சுமி மெட்டல் மார்ட் கட்டிட உரிமையாளருக்கும் அனுப்பப்பட்டன.

4) துறையூர் நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.4335/2025/எப்1 நாள்20.04.2026–ல் கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்.

" ஸ்ரீ ஜெயலெட்சுமி மெட்டல் மார்ட் வணிக வளாகம் கடந்த 19 வருடங்களுக்கு மேலாக துறையூரில் இயங்கி வருவதாக தெரிய வருகிறது. அதில் தரைத்தளத்தில் ஸ்ரீ ஜெயலெட்சுமி மெட்டல் மார்ட், முதல் தளம் , இரண்டாம் தளத்தில், குடோன் இயங்கி வருவதாக தெரியவருகிறது. தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்தில் தலா 540 சதுரடிக்கு மட்டுமே அனுமதி பெறப்பட்டு அனுமதிக்கு மாறாக தலா 918 சதுரடி பரப்பளவில் RCC கட்டிடம் அமையப்பெற்ற வணிக வளாகம் இயங்கி வருகிறது. கட்டுமானத்தின் மொத்த பரப்பளவு 2,754 சதுரடியாகும். முன்பக்கம் 2 அடி திறவிடம் அமைந்துள்ளது. பின்பக்கம் திறவிடம் என்று இடம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. வாகனம் நிறுத்துவதற்கு இடம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

வரிவிதிப்பு எண்கள் 087/014/900653, 087/014/901062 ஆகிய 2 வரிவிதிப்புகளில் சொத்துவரி செலுத்தப்பட்டு வருகிறது. குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்படவில்லை.

எனவே, மேற்படி கட்டுமானத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133, 135 (1)ன் கீழ் ஸ்ரீ ஜெயலெட்சுமி மெட்டல் மார்ட் உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கி தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

5) மனுதாரர் தனது மின்னஞ்சல் கடித நாள் 14.05.2006–ல் தான் வீடு மாறுதலாகி சென்றபோது வாகனத்தில் இருந்து கீழே விழுந்து கால் எலும்பு முறிவு ஏற்பட்டதால் 19.05.2026ல்

நடைபெறும் விசாரணையில் கலந்து கொள்ள முடியாத சூழ்நிலை இருப்பதால் மேற்படி விசாரணைக்கு ஆஜராக இயலாது". எனத் தெரிவித்துள்ளார்.

6) மேலும் மனுதாரர் தனது 14.05.2026 நாளிட்டு அளித்த எழுத்துபூர்வ அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

திருச்சி மாவட்டம், துறையூரில், துறையூர்–திருச்சி சாலையில் 145–ல் ஸ்ரீ ஜெயலட்சுமி மெட்டல் மார்ட் கடை 3 மாடிகளுடன் அரசு கழிவுநீர் கால்வாயில் வாசல்படி வைத்து பார்க்கிங், செட்பேக் வசதியின்றியும், திருமுருகன் ஸ்டோர்ஸ்க்கு வடக்குபுறம் ஸ்ரீ ஜெயலட்சுமி மெட்டல் மார்ட் என்ற கடை 4 மாடிகளுடன் அரசு கழிவுநீர் கால்வாயில் வாசல்படி வைத்து பார்க்கிங், செட்பேக் வசதியின்றி ஒரே நபருக்கு சொந்தமான இரண்டு கட்டிடங்களும், TNCDBR 2019 சட்டத்திற்கு விரோதமாக கட்டப்பட்டு விதிமீறி செயல்பட்டு வருகின்றது. துறையூர் நகராட்சி ஆணையருக்கு புகார் கொடுத்தும், லஞ்சம் பெற்றுக்கொண்டு இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை.

"ஏற்கனவே உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்றத்தில் நடந்த பெரும்பாலான வழக்குகளில் நான் புகார் கொடுத்தற்கு பின்பு தான் பார்க்கிங் இடம் வாங்கியதாக அனைத்து கட்டிட நிர்வாகிகளும் இந்த முறை மன்றத்தில் பொய்யாக கூறி உள்ளதாலும், கட்டிட நிர்வாகிகளுக்கு சாதகமாக பார்க்கிங் இடம் புதிதாக வாங்கியதாக அனைத்து ஆணையர்களும் பொய்யாக கூறி வருவதால் இந்த வழக்கிலும் பார்க்கிங் இடம் வரைபடத்தில் காண்பிக்காமல் புதிதாக வாங்கி உள்ளதாக கூறினால் பார்க்கிங் இடம் வாங்கியதற்கான இடத்தின் ஆவணத்தை நகராட்சியில் பதிவு செய்து பார்க்கிங் இடத்திற்கான ரசீது நகராட்சியால் வழங்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளதா என்பதையும் பார்க்கிங் இடம் வாங்கியதற்கான இடத்தின் ஆவணத்தை உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்றத்தில் தாக்கல் செய்ய சொல்லி அதனை தாங்கள் வழக்கின் உத்தரவில் தெரிவிக்க வேண்டுகின்றேன்.

மேலும் உள்ளாட்சி அதிகார வணிக உபயோக கட்டிட வரம்பு (தரைதளம் + முதல் தளம்) 2000 சதுர அடி என்று விதிமுறை இருப்பதால் ஸ்ரீ ஜெயலட்சுமி மெட்டல் மார்ட் உள்ள இரண்டு கட்டிடங்களும் உள்ளாட்சி அதிகார வணிக உபயோக கட்டிட வரம்பு விதிப்படி தான் கட்டப்பட்டுள்ளதா என்பதை வழக்கின் உத்தரவில் தொவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஏற்கனவே உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்றத்தில் நடந்த பொரும்பாலான வழக்குகளில் கட்டிட அனுமதி பெறப்பட்ட ஆவணம் நகராட்சியிடம் இல்லை என்று துறையூர் நகராட்சி ஆணையர்கள் தொடர்ந்து கூறி வருவதால் சமீபத்தில் சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வில் நடந்த CMP No. 4315/2026 வழக்கில் சென்னை மாநகராட்சி அதிகாரிகள் கோப்பு தொலைந்து விட்டது என்று கூறியதற்கு இது போதுமான காரணமில்லை என்றும் அரசு அலுவலகங்கள் கோப்பு சுற்று முறை என்று கூறி தப்பிக்க முடியாது என்றும் இது எதிர் தரப்புடன் சேர்த்து கூட்டுசதியாக இருக்கலாம் என்றும் உச்சநீதிமன்றம் ஏற்கனவே பல தீர்ப்புகளில் தெளிவாக கூறியதாக கூறி இந்த வழக்கை விஜிலன்ஸ் துறை விசாரித்து உண்மையை கண்டறிய வேண்டும் என்று 20.02.2026ல் உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும் ஆவணம் இல்லை என்று கூறியதற்காக கல்வித்துறை இயக்குனருக்கு ரூ.50 லட்சம் அபராதம் விதித்துள்ளது. எனவே இந்த வழக்கிலும் ஆவணம் இல்லை என்று கூறினால் மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவின்கீழ் நகராட்சி ஆணையர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே மாண்புமிகு உச்சநீதிமன்றம் 12199–12200 நாள் 30.04.2025 வழக்கின் உத்தரவில் அனுமதியற்ற கட்டிடத்தை முறை படுத்த கூடாது என்றும் விதிமீறிய கட்டிடத்தை இடிப்பது ஒன்றுதான் வழி என்றும் இதற்கு வேறுவழி இல்லை என்று கூறியுள்ள நிலையில் மாண்புமிகு தங்கள் முன்பு நடைபெற்ற பெரும்பாலான வழக்குகளில் விதிமீறிய கட்டிட நிர்வாகிகள் அனுமதியற்ற கட்டிடத்தை முறைபடுத்த 80Aன் கீழ் மேல் முறையீடு செய்து மனு அளித்துள்ளதை தாங்கள் சட்டப்படி மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவிற்கு எதிராக ஏற்றுக்கொள்ள முடியுமா என்பதை உத்தரவில் தெளிவாக விளக்கவும்.

மேலும் ஏற்கனவே உள்ளாட்சி அமைப்புகளில் முறைமன்றத்தில் நடந்த முறையீட்டு மனுக்கள் 102/ந/2025, 104/ந/2025 ஆகிய வழக்கு விசாரணையின் போது தங்கள் முன்பு 10.06.2025ல்

நேரடியாக ஆஜராகி சத்திய பிரமாணம் செய்து அளித்த வாக்கு மூலத்தில் துறையூர் நகராட்சி ஆணையர் (பொறுப்பு) மற்றும் மேலாளர் அம்பிகா அவர்கள் மேற்கண்ட 102/ந/2025 ராஜா சில்க்ஸ் 104/ந/2025 ஸ்ரீ குமரன் டெக்ஸ் இரண்டின் ஆவணம் நகராட்சியில் இல்லை என்று தெரிவித்து விட்டு ந.க.எண்.2654/2025/சி2 நாள் 01.08.2025 கடிதம் மூலம் எனக்கு ராஜா சில்க்ஸ், ஸ்ரீ குமரன் டெக்ஸ் ஆவணத்தை பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்.

எனவே, மரியாதைக்குரிய நீதிபதி தகுதியுடன் இருக்கும் தங்கள் முன்பாக சத்திய பிரமாணம் செய்து ஆவணம் இல்லை என்று தைரியமாக துணிச்சலாக கூறிவிட்டு அதற்கு நேர் மாறாக ஆவணம் பெற்றுக் கொள்ளுமாறு எனக்கு கடிதம் அனுப்பிய துறையூர் நகராட்சியின் செயல் விதிமீறிய அனைத்து கட்டிட நிர்வாகிகளிடமும் கை கோர்த்து கொண்டு சட்டத்தை மீறி செயல்படுவதை வழக்கமாகவும், வாடிக்கையாகவும் கொண்டு செயல்படும் செயலையே காட்டுகின்றது.

எனவே, மதிப்புமிக்க நேர்மையின் சிகரமான தாங்கள் துறையூர் நகராட்சியின் ஊழலை தடுத்து நிறுத்தும் பொருட்டு துறையூரில் உள்ள ஸ்ரீ ஜெயலட்சுமி மெட்டல் மார்ட் என்ற இரண்டு கட்டிடத்தையும் நேரில் இட நேராய்வு செய்து அந்த இரண்டு கட்டிடங்களும் கட்டிட வரைபடத்தில் உள்ளவாறு முறையாக விதிப்படி கட்டப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்து விதிமீறி கட்டப்பட்டுள்ளது தெரியவந்தால் மாண்புமிகு உச்ச நீதிமன்ற உத்தரவு எண்.12199–12200 நாள் 30.04.2025ன்படி இடித்து அகற்றுமாறும், நான் புகாரில் கூறியது பொய் என்றால் என்மீது எடுக்கும் நடவடிக்கையை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன் என்பதை பணிவுடன் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

7). எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க. எண்.4335/எப்1/2025, நாள் 18.05.2026ல், கடிதத்தில் 19.05.2026 அன்று நடைபெற உள்ள விசாரணைக்கு ஆணையர் அவர்களால் ஆஜராக இயலாத நிலை உள்ளதால், ஆணையருக்கு பதிலாக இந்நகராட்சியில் நகரமைப்பு ஆய்வர் திருமதி. த. தவமணி கலந்து கொள்ள அனுமதிக்க கேட்டுக்கொண்டதை தொடர்ந்து நகராட்சியின் நகரமைப்பு ஆய்வர் அவர்கள் 19.05.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்கு மூலத்தை பதிவு செய்துள்ளார்.

"ஸ்ரீ ஜெயலட்சுமி மெட்டல் மார்ட் வணிக வளாகம் கடந்த 19 வருடங்களுக்கும் மேலாக துறையூரில் இயங்கி வருகிறது. அதில் தரைத்தளத்தில் ஸ்ரீ ஜெயலட்சுமி மெட்டல் மார்ட், முதல் தளம், இரண்டாம் தளத்தில், குடோன் இயங்கி வருகிறது. தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்தில், தலா 540 சதுர அடிக்கு மட்டுமே அனுமதி பெறப்பட்டு அனுமதிக்கு மாறாக தலா 918 சதுர அடி பரப்பளவில் RCC கட்டிடம் அமையப்பெற்ற வணிக வளாகம் இயங்கி வருகிறது. கட்டுமானத்தின் மொத்த பரப்பளவு 2,754 சதுர அடியாகும். முன்பக்கம் 2 அடி திறவிடம் அமைந்துள்ளது. பின்பக்கம் திறவிடம் என்று இடம் ஒதுக்கீடு செய்யவில்லை. வாகனம் நிறுத்துவதற்கு இடம் ஒதுக்கீடு செய்யவில்லை.

வரிவிதிப்பு எண்கள் 087/014/900653, 087/014/901062 ஆகிய இரண்டு வரிவிதிப்புகளில் சொத்துவரி செலுத்தப்பட்டு வருகிறது. குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்படவில்லை.

மேற்படி கட்டுமானத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133, 135(1)ன் கீழ் ஸ்ரீ ஜெயலட்சுமி மெட்டல் மார்ட் உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்."என தெரிவித்துள்ளார்.

8) 2–ம் எதிர்மனுதாரரான ஸ்ரீ ஜெயலட்சுமி மெட்டல் மார்ட் உரிமையாளர் திரு. வி. சீனிவாசன் என்பவர் 19.05.2026 அன்றைய விசாரணையில் ஆஜராகி தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"எங்களது ஸ்ரீ ஜெயலட்சுமி மெட்டல் மார்ட் அமைந்துள்ள கட்டிடம் 20 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டதாகும் . தற்போது விதிமீறி கட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்ட எங்களது கட்டிடத்தினை வரன்முறை செய்திட உரிய அமைப்பிடம் மனு செய்து கொள்ள உள்ளேன். எனவே, விதிமீறி கட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள எங்களது கட்டிடத்தினை முறைபடுத்திட ஏதுவாக கால அவகாசம் வழங்கி உதவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் வேண்டிக்கேட்டுக்கொள்கிறேன்".

9) மனுதாரரின் புகார்மனு, அறிக்கை, எதிர்மனுதாரரான துறையூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி நகரமைப்பு ஆய்வரின் வாக்குமூலம், 2–ம் எதிர்மனுதாரரான ஸ்ரீ ஜெயலட்சுமி மெட்டல் மார்ட் கடை உரிமையாளர் திரு. வி. சீனிவாசன் என்பவரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

திருச்சி மாவட்டம், துறையூர் திருச்சி சாலையில் சுப்ரீம் மொபைல்ஸ் கடைக்கு தெற்கு புறம் 145ல் ஸ்ரீ ஜெயலட்சுமி மெட்டல் மார்ட் கடை 3 மாடிகளுடன் அரசு கழிவு நீர் கால்வாயில் வாசல்படி வைத்து பார்க்கிங், செட்பேக் வசதியின்றி ஒரு கடை செயல்படுகின்றது என்பதும் திருமுருகன் ஸ்டோர்ஸ்க்கு வடக்குபுறம் ஸ்ரீ ஜெயலட்சுமி மெட்டல் மார்ட் கடை 4 மாடிகளுடன் அரசு கழிவுநீர் கால்வாயில் வாசல்படி வைத்து பார்க்கிங், செட்பேக் வசதியின்றி மற்றொரு கடை இயங்கி வருகின்றது என்பதும் விதிமீறிய ஸ்ரீ ஜெயலட்சுமி மெட்டல் மார்ட் என்று பெயரிடப்பட்டுள்ள 2 கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளது என்பதும் அந்த கட்டிடங்களை மாண்புமிகு உச்ச நீதிமன்ற உத்தரவின் கீழ் இடித்து அகற்றுமாறு தனது மனு மற்றும் அறிக்கையில் கோரியுள்ளார்.

ஸ்ரீ ஜெயலட்சுமி மெட்டல் மார்ட் வணிக வளாகம் கடந்த 19 வருடங்களுக்கும் மேலாக துறையூரில் இயங்கி வருகிறது என்பதும், தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்தில், குடோன் தலா 540 சதுர அடிக்கு மட்டுமே அனுமதி பெறப்பட்டது என்பதும் அனுமதிக்கு மாறாக தலா 918 சதுர அடி பரப்பளவில் RCC கட்டிடம் அமையப்பெற்ற வணிக வளாகம் இயங்கி வருகிறது என்பதும் வாகனம் நிறுத்துவதற்கு இடம் ஒதுக்கீடு செய்யவில்லை என்பதும் வரிவிதிப்பு எண்கள் 087/014/900653, 087/014/901062 ஆகிய இரண்டு வரிவிதிப்புகளில் சொத்துவரி செலுத்தப்பட்டு வருகிறது என்பதும் குடிநீர் இணைப்பு வழங்கப்படவில்லை என்பதும் மேற்படி கட்டுமானத்தை அனுமதியற்ற கட்டுமானமாக கருதி தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998 (திருத்தப்பட்ட சட்டம் 35/2022) பிரிவு 133, 135(1)ன் கீழ் ஸ்ரீ ஜெயலட்சுமி மெட்டல் மார்ட் உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதும் துறையூர் நகராட்சி ஆணையர் மற்றும் நகரமைப்பு ஆய்வரின் வாக்குமூலத்திலிருந்து தெரிய வருகிறது.

ஸ்ரீ ஜெயலட்சுமி மெட்டல் மார்ட் அமைந்துள்ள கட்டிடம் 20 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டது என்பதும் விதிமீறி கட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்ட கட்டிடத்தினை வரன்முறை செய்திட உரிய அமைப்பிடம் மனு செய்து கொள்ள உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதும், விதிமீறி கட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள தங்களது கட்டிடத்தினை முறைபடுத்திட கால அவகாசம் வழங்கக்கோரியுள்ளதும், 2ம் எதிர்மனுதாரரின் வாக்குமூலத்திலிருந்து தெரிய வருகிறது.

இந்நேர்வில், 2ம் எதிர்மனுதாரர் அரசு கூடுதல் செயலாளர், தமிழ்நாடு நகர்ப்புற மற்றும் ஊரமைப்புத்துறை, சென்னைக்கு 25.05.2026 நாளிட்டு அனுப்பிய கடிதத்தின் நகலினை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ளார். அதில், தங்களது கட்டிடத்தினை Tamil Nadu Town and Country Planning Act, 1971, பிரிவு 80–அன்படி வரன்முறை செய்து கொள்ள விரும்புகிறோம் என தெரிவித்துள்ளார். மேற்படி பிரிவின்படி ஸ்ரீ ஜெயலட்சுமி மெட்டல் மார்ட் உரிமையாளர் அரசுக்கு மேல்முறையீடு செய்திருப்பதை உறுதி செய்து, அரசாணையினடிப்படையில் நடவடிக்கைகளை

தொடருமாறு துறையூர் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு, ஜுன் திங்கள் 30 –ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒம்/–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. S.அன்பழகன்,
த/பெ ப. திரு.சீனிவாசன்,
எண்.155, அசோக் நகர்,
முசிறி மெயின்ரோடு, துறையூர் (அஞ்சல் & வட்டம்)
திருச்சிராப்பள்ளி மாவட்டம் – 621 010.

2) நகராட்சி ஆணையர்,
துறையூர் நகராட்சி, துறையூர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3) கட்டிட உரிமையாளர்,
ஸ்ரீ ஜெயலட்சுமி மெட்டல் மார்ட்,
கதவு எண்.145, திருச்சி சாலை,
சுப்ரீம் மொபைல்ஸ் கடைக்கு தெற்கு புறம்,
துறையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம். (இணைப்பு)

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

5) இணை இயக்குநர், ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032

செயலாளர்.